## <u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>

## <u>அசல் வழக்கு எண். 198/2020</u>

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ம் நாள் புதன் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஆர்.ஜனனி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேதுராமன் | தந்தை/கணவர் பெயர் | : | |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 26.07.2023

**P.W. : 1**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

புனிதா ராகினி லுத்தர் என்பவர் பெயரில் உள்ள வரி விதிப்பின் எண்.52000605ன் கணினி நகல் வா.சா.ஆ.1 ஆகும். புனிதா ராகினி லுத்தர் என்பவர் பெயரில் இருந்து சத்யபாமா பெயருக்கு மாற்றப்பட்ட வரிவிதிப்பு எண். 52000605ன் கணினி நகல் வா.சா.ஆ.2 ஆகும். 10.12.2015 பிரதிவாதியால் வாதிக்கு கொடுக்கப்பட்ட பிரிவு 8(1) ன் படியான குற்ற குறிப்பாணை வா.சா.ஆ.3 ஆகும். 09.09.2015 உதவி ஆணையர் கோ.அபிஷேகபுரம் கோட்டம் அவர்கள் நடத்திய விசாரணை வாதி கொடுத்த எழுத்துமூல வாதுரையின் கை நகல் வா.சா.ஆ.4 ஆகும். 04.03.2016ம் தேதியன்று வாதியால் விசாரணை அதிகாரிக்கு விபரம் கேட்டு அனுப்பிய கடிதம் புகைப்பட நகல் வா.சா.ஆ.5 ஆகும். 23.03.2016ம்

தேதியன்று வாதியால் அனுப்பப்பட்ட நினைவூட்டல் கடிதத்தின் புகைப்பட நகல் வாசா.ஆ 6 ஆகும். 06.10.2015 புனிதா ராகினி லுத்தர் என்பவர் பெயரில் இருந்து சத்யபாமா பெயருக்கு மாற்றப்பட்ட வரிவிதிப்பு எண். 52000605 நீக்கறவு செய்ய உதவி ஆணையர் கோ. அபிஷேகபுரம் அவர்களிடம் இருந்து ஆணையர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு கொடுக்கப்பட்ட கடிதத்தின் புகைப்பட நகல் வா.சா.ஆ.7 ஆகும். (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). வாதியால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் மற்றும் கோ. அபிஷேகபுரம் உதவி ஆணையர் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்த நீதிப்பேராணை W.P. MD No. 15779/2016 ன் மனு வா.சா.ஆ.8 ஆகும். 15.02.2019 ம் தேதியன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அசல் வா.சா.ஆ.9 ஆகும். 07.07.2020 தேதியன்று வாதியால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.10 ஆகும். 28.07.2020 ம் தேதியன்று பிரதிவாதியால் வாதிக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.11 ஆகும். 01.08.2020 ம் தேதியன்று வாதியால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட மறு அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.12 ஆகும். 16.02.2016 ம் தேதியன்று திருச்சி மாநகராட்சி வாதிக்கு ஆவணங்கள் அனுப்பியதற்கான அறிவிப்பு அசல் வா.சா.ஆ.13 ஆகும். 18.08.2015 ம் தேதியன்று ஒ. பாலசுப்பிரமணியன் மாவட்ட செயலாளர் மார்கஸ் பார்ட்டி அவர்கள் சென்னை லஞ்ச ஒழிப்பு துறைக்கு ஒரு புனித ராகினி லுத்தர் அவர்களின் பெயரில் இருந்து சத்யபாமா பெயருக்கு மாற்றப்பட்ட வரிவிதிப்பு தொடர்பாக கொடுத்த புகார் புகைப்பட நகல் வா.சா.ஆ.14 ஆகும். 09.09.2016 ம் தேதியன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு உதவி ஆணையர்

கோ.அபிஷேகபுரம் அவர்களால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் புகைப்பட நகல் வா.சா.ஆ.15 ஆகும். 22.12.2015 ம் தேதியன்று மேற்படி 10.12.2015 தேதியிட்ட குற்ற குறிப்பாணைக்கு வாதியால் வழங்கப்பட்ட பதிலுரை கடித எண். Doc.No.7873/2015/K3(center) புகைப்பட நகல் வா.சா.ஆ.16 ஆகும். (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் வா.சா.ஆ. 14 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன).

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது).**